செ.கு. எண்: 192 நாள்: 24-05-2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 24.5.2012

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், ஆவரம்பட்டி, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மஸ்தூராகப் பணி புரிந்து வந்த திரு. திருமுருகன் என்பவர் 22.5.2012 அன்று ஜெயலட்சுமி பயர்ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையில் மின்மாற்றியில் ப்யூஸ் ஒயர் பொருத்தும் போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்கள் 22.5.2012 அன்று சிமெண்ட் கம்பங்களை டிராக்டர் டிரெய்லரில் ஏற்றிகொண்டு சென்ற போது, டிரெய்லர் கவிழ்ந்ததில், டிரெய்லரில் பயணம் செய்த திரு மோகன், திரு நாகேந்திரன், திரு கோபால் மற்றும் திரு சிவலிங்கம் ஆகிய நான்கு பணியாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

மேலும், இவ்விபத்தில் மூன்று பேர் பலத்த காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகத்தினருக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு திருமுருகன், திரு மோகன், திரு நாகேந்திரன், திரு கோபால் மற்றும் திரு சிவலிங்கம் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியின்போது காலமான திரு திருமுருகன், திரு மோகன், திரு நாகேந்திரன், திரு கோபால் மற்றும் திரு சிவலிங்கம் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று பேருக்கு தலா 25,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9